## இனிமையான குழந்தைகளே! நீங்கள் தன்னுடைய சௌபாக்கியத்தை உருவாக்கிக் கொள்வதற்காக தந்தையிடம் வந்துள்ளீர்கள். ஈஸ்வர் எந்த குழந்தைகளுடைய அனைத்தையும் ஏற்றுக் கொள்கிறாரோ, அந்த குழந்தைகளே, பரம சௌபாக்கியசாலிகள்.

கேள்வி: குழந்தைகளின் எந்த ஒரு மறதியினால் மாயை மிகவும் பலசாலி ஆகிறது?

பதில்: குழந்தைகள் சமைக்கும் போது பாபாவை மறந்து போகிறார்கள். பாபாவிற்கு (போக்) கொடுக் காத (வைக்காத) காரணத்தினால் மாயை சாப்பாட்டை சாப்பிட்டு விடுகிறது. இதனால் அது பலசாலி ஆகிவிடுகிறது. பிறகு குழந்தைகளுக்கு துன்பம் தருகிறது. இந்த ஒரு சிறிய மறதியினால் மாயா விடம் தோல்வி ஏற்படுகிறது. ஆகையினால் பாபாவின் கட்டளை குழந்தைகளே என் நினைவில் இருந்து சாப்பிடுங்கள். உன்னுடன் தான் சாப்பிடுவேன்....... மாறாத உறுதிமொழி எடுங்கள். எப்போது நினைவு செய்கிறீர்களோ அப்போது தான் திருப்தியாக இருப்பார்.

பாடல்: இன்று இல்லையென்றாலும் நாளை இந்த மேகங்கள் கலையும்...........

ஓம் சாந்தி. நம்முடைய துர்பாக்கியத்தின் நாட்கள் மாறி இப்போது சதா காலத்திற்கும் சௌபாக்கியத் தின் நாட்கள் வந்துக் கொண்டிருக்கிறது என குழந்தைகள் புரிந்துக் கொள்கிறீர்கள். முயற்சிக்கு ஏற்ப வரிசைக் கிரமத்தில் பாக்கியம் மாறிக் கொண்டே இருக்கிறது. பள்ளிக் கூடத்தில் கூட பாக்கியம் மாறிக் கொண்டே இருக் கிறது அல்லவா. அதாவது உயர்ந்ததாகிக் கொண்டே இருக்கிறது. இப்போது இந்த இரவு முடியப் போகிறது, பாக்கியம் மாறிக் கொண்டிருக்கிறது என நீங்கள் நன்கு தெரிந்துள்ளீர் கள். அதாவது சொர்க்கத்திற்கு அதிபதியாகிக் கொண்டிருக்கின்றீர்கள். நாம் வரிசைக்கிரமத்தில் முயற்சிக்கு ஏற்றார் போல நம்முடைய துர்பாக்கியத்தை சௌபாக்கியமாக மாற்றிக் கொண்டிருக் கின்றோம். இப்போது இரவிலிருந்து பகலாக மாறிக் கொண்டிருக்கிறது. குழந்தைகளாகிய உங்களைத் தவிர வேறு யாருக்கும் இது தெரியவில்லை. பாபா குப்தமாக இருக்கிறார். அவருடைய விசயங்களும் குப்தமாக இருக்கிறது. மனிதர்கள் அமர்ந்து சகஜ இராஜயோகம் மற்றும் சகஜ ஞானத்தின் விசயங்கள் சாஸ்திரங்களில் எழுதி இருக்கிறார்கள். ஆனால் யார் எழுதினார்களோ அவர்கள் இறந்து விட்டனர். மற்றபடி யார் படிக்கிறார்களோ அவர்கள் எதையும் புரிந்துக் கொள்வதில்லை. ஏனென்றால் முட்டாளாக இருக்கிறார்கள். எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. நீங்கள் வரிசைக்கிரமத்தில் முயற்சி செய்து புரிந்துக் கொண்டிருக்கிறீர்கள். அனைவரும் ஒன்று போல முயற்சி செய்வதில்லை. துர்பாக்கியம் என்று எதற்கு கூறப்படுகிறது, சௌபாக்கியம் என்று எதற்கு கூறப்படுகிறது என்பதை பிராமணர்களாகிய நீங்கள் மட்டும் தான் அறிகிறீர்கள். மேலும் அனைவரும் காரிருளில் இருக்கிறார்கள். அவர்களுக்குப் புரிய வைத்து எழுப்ப வேண்டும். சூரிய வம்சத்தினருக்கு சௌபாக்கியசாலி என கூறப்படுகிறது. அவர்களே 16 கலைகளில் நிரம்பியவர்கள். நாம் பாபாவிடமிருந்து சொர்க்கத்திற்காக சௌபாக்கியத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். அந்த தந்தையே சொர்க்கத்தை படைக்கக் கூடியவர். ஆங்கிலம் தெரிந்தவர்களுக்குக் கூட

நாங்கள் இறை தந்தை மூலமாக சொர்க்கத்தின் சௌபாக்கியத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என நீங்கள் புரிய வைக்க முடியும். சொர்க்கத்தில் சுகம் இருக்கிறது. நரகத்தில் துக்கம் இருக்கிறது. கோல்டன் ஏஜ் என்றால் சத்யுகம் சுகமானது. அயர்ன் ஏஜ் என்றால் கலியுகம் துக்கமானது. முற்றிலும் எளிய வி˜யம் ஆகும். இப்போது நாம் முயற்சி செய்துக் கொண்டிருக்கிறோம். ஆங்கிலேயர்கள், கிறிஸ்துவர்கள் போன்றோர் நிறைய வருவார்கள். நாங்கள் ஒரேயொரு சொர்க்கத்தை படைப்பவராகிய இறை தந்தையை மட்டும் நினைக்கின்றோம். ஏனென்றால் மரணம் எதிரில் நிற்கிறது என கூறுங்கள். நீங்கள் என்னிடம் தான் வர வேண்டும் என பாபா கூறுகிறார். தீர்த்த யாத்திரைகளுக்கு கூட போகிறார்கள் அல்லவா. பௌத்தர்களுக்கு என அவர்களுடைய தீர்த்த ஸ்தலம் இருக்கிறது. அதே போல கிறிதுவர்களுக்கும் இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் அவரவருக் கென பழக்க வழக்கங்கள் இருக்கிறது. நம்முடையது புத்தியோகத்தின் விசயம் ஆகும். எங்கிருந்து நடிக்க வந்திருக்கின்றோமோ அங்கேயே மீண்டும் போக வேண்டும்.அவரே சொர்க்கத்தை ஸ்தாபனை செய்யக் கூடிய இறை தந்தை. நான் உங்களுக்கு உண்மையான வழியை தெரிவிக்கின்றேன் என அவர் நமக்கு கூறியுள்ளார். தந்தை காட் ஃபாதரை நினைத்தால் கடைசி நினைவிற்கு ஏற்ப நல்ல நிலையை அடையலாம். யாராவது நோய் வாய்பட்டால் அனைவரும் சென்று அவருக்கு இராம் என கூறுங்கள் என கவனமேற்கொள்ளச் செய்கிறார்கள். வங்காளத்தில் யாராவது இறக்கும் தருவாயில் இருந்தால் கங்கை கரைக்கு எடுத்து சென்று ஹரி என கூறுங்கள், ஹரி என கூறுங்கள்..... ஹரியிடம் சென்று விடுவீர்கள் என கூறுகின்றார்கள். யாரும் செல்வதில்லை. சத்யுகத்தில் ராம் ராம் என கூறுங்கள் அல்லது ஹரி என கூறுங்கள் என சொல்ல மாட்டார்கள். துவாபரயுகத்தில் இருந்து தான் இந்த பக்தி மார்க்கம் ஆரம்பம் ஆகின்றது. சத்யுகத்தில் யாரும் எந்த பகவானையும் குருவையும் நினைப்பது கிடையாது. அங்கே தன்னுடைய ஆத்மாவிற்கு நாம் ஆத்மா இந்த உடலை விட்டு இன்னொன்றை எடுப்போம் என நினைவு படுத்தப்படுகிறது. தன்னுடைய இராஜ்யம் நினைவில் இருக்கிறது. நம்முடைய இராஜ்யத்தில் சென்று பிறப்போம் என புரிந்துக் கொள்கிறார்கள். இப்போது இராஜ்யம் கிடைக்கிறது என்பதில் உறுதியான நிச்சயம் இருக்கிறது. மற்றபடி வேறு யாரை நினைப் பார்கள். அல்லது தான புண்ணியம் செய்வார்கள். அங்கே தான புண்ணியம் செய்வதற்கு யாரும் ஏழைகளே இருக்க மாட்டார்கள். பக்தி மார்க்கத்தின் பழக்க வழக்கம் தனி. ஞான மார்க்கத்தின் பழக்க வழக்கம் தனி. இப்போது பாபாவிற்கு அனைத்தையும் கொடுத்து விட்டு 21 பிறவிகளுக்கான ஆஸ்தியை எடுத்தாயிற்று அவ்வளவு தான் பிறகு தான புண்ணியத்தின் அவசியம் இல்லை. ஈஸ்வரனாகிய தந்தைக்கு நாம் அனைத்தையும் கொடுத்து விடுகிறோம், ஈஸ்வரன் தான் ஏற்றுக் கொள்கிறார். ஏற்றுக் கொள்ள வில்லை என்றால் எப்படி கொடுப்பது. ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் அதுவும் துர்பாக்கியமே. ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. அப்போது அவர்களின் பற்று விலகும். இந்த ரகசியத்தைக் கூட குழந்தைகளாகிய நீங்கள் அறிகிறீர்கள். அவசியம் இல்லை என்றால் ஏன் ஏற்றுக் கொள்வார். இங்கே எதையும் சேர்த்து வைக்க வேண்டியதில்லை. இங்கிருந்து பற்றுதலை விலக்க வேண்டியிருக்கிறது.

வெளியே எங்கு சென்றாலும் தன்னை மிகவும் இலேசாக வைத்துக் கொள்ளுங்கள் என பாபா புரிய வைத்திருக்கிறார். நாம் பாபாவின் குழந்தைகள்

ஆத்மாக்களாகிய நாம் ராக்கெட்டை விட வேகமாக இருக்கின்றோம். இவ்வாறு ஆத்மா உணர்விலிருந்து நடந்தால் ஒரு போதும் களைப்பு ஏற்படாது. தேக உணர்வு வராது. இந்த கால்கள் நடப்பது போன்றே இருக்காது. நாம் பறந்துக் கொண்டு இருப்போம். நீங்கள் ஆத்ம உணர்வுடையவராகி எங்கு வேண்டுமானாலும் செல்லுங்கள். முன்பு மனிதர்கள் தீர்த்த யாத்திரைகளுக்கு நடந்து தான் சென்றனர். அச்சமயம் மனிதர்களின் புத்தி தமோபிரதானமாக இல்லை. மிகவும் சிரத்தையோடு சென்றனர். களைப் படையவில்லை. தந்தையை நினைவு செய்யும் போது உதவி கிடைக்கும் அல்லவா. அது கற்சிலையாக இருக்கலாம். ஆனாலும் பாபா அச்சமயம் அல்பகாலத்திற்காக மனோவிருப்பங்களை நிறைவேற்றுகின்றார். அந்த சமயம் ரஜோபிரதானமான நினைவு இருந்தது. அதிலும் கூட பலம் கிடைத்தது. களைப்பு ஏற்படவில்லை. இப்போதோ பெரிய ஆட்கள் கூட உடனே களைத்து போகிறார்கள். நிறைய ஏழைகள் தான் தீர்த்த யாத்திரைகளுக்கு செல்கிறார்கள். பணக்காரர்கள் மிகவும் பகட்டோடு குதிரை போன்றவைகளில் செல்கிறார்கள். ஏழைகளோ நடந்தே செல்வார்கள். ஏழைகளுக்கு பாவனையின் பலன் கிடைக்கும். அந்த அளவிற்கு பணக்காரர்களுக்கு கிடைப்பதில்லை. பாபா ஏழைபங்காளனாக இருக்கிறார். பிறகு ஏன் குழப்பம் அடைகிறீர்கள்? ஏன் மறந்து போகிறீர்கள்? நீங்கள் எந்த ஒரு துன்பமும் அடைய வேண்டியதில்லை என பாபா கூறுகிறார். ஒரே ஒரு மணவாளனை மட்டும் நினைக்க வேண்டும். நீங்கள் அனைவரும் மணப்பெண் என்றால் மணவாளனை நினைக்க வேண்டும். அந்த மணவாளனுக்கு போக் படைக்காமல் சாப்பிட்டால் வெட்கம் ஏற்படாதா? அவர் மணவாளனாகவும் இருக்கிறார், தந்தையாகவும் இருக்கிறார். எனக்கு நீங்கள் உணவளிக்க மாட்டீர்களா? என கூறு கின்றார். உங்களுக்கு நான் கொடுக்க வேண்டும் அல்லவா. பாருங்கள்! பாபா வழிமுறைகளை கூறு கின்றார். நீங்கள் தந்தை அல்லது மணவாளன் என ஏற்றுக் கொள்கிறீர்கள் அல்லவா. யார் கொடுக் கிறாரோ முதலில் அவருக்கு கொடுக்க வேண்டும். எனக்கு போக் வைத்து விட்டு என்னுடைய நினைவில் உணவருந்துங்கள் என பாபா கூறுகின்றார். இதில் கடின உழைப்பு வேண்டும். பாபா மீண்டும் மீண்டும் புரிய வைக்கின்றார். பாபாவை நிச்சயமாக நினைக்க வேண்டும். குமாரிகளாகிய உங்களுக்கு இது மிகவும் எளிது. கன்னிப் பெண்களுக்கு மணவாளனுடன் நிச்சயம் செய்யப்படுகிறது. இப்படிபட்ட மணவாளனை நினைவு செய்து சாப்பிட வேண்டும். அவரை நாம் நினைத்தவுடன் அவர் நம்மிடம் வருகின்றார். நினைத்தாலே அந்த வாசனையை எடுப்பார். பாபாவுடன் இப்படி எல்லாம் பேச வேண்டும். நீங்கள் இரவில் எழுந்தால் இப்படிபட்ட பயிற்சிகள் ஏற்படும். பயிற்சி செய்து விட்டால் பிறகு பகலிலும் நினைவிருக்கும். சாப்பிடும் போதும் நினைவு செய்ய வேண்டும். பிரிய தர்^னுடன் உங்களுக்கு நிச்சயம் செய்யப்பட்டிருக்கிறது. உன்னுடன் தான் சாப்பிடுவேன்...... இதில் பக்காவாக உறுதியாக இருக்க வேண்டும். நீங்கள் நினைவு செய்தால் தான் அவர் சாப்பிடுவார் அல்லவா. அவருக்கு அந்த வாசனை தான் கிடைக்கிறது. ஏனென்றால் அவருக்கென்று உடல் இல்லை. குமாரிகளுக்கு மிகவும் எளிதாகும். இவர்களுக்கு நிறைய வசதிகள் இருக்கின்றது. சிவபாபா நம்முடைய அழகான பிரிய தர்சன், எவ்வளவு இனிமையாக இருக்கிறார். அரைக்கல்பமாக நாம் அவரை நினைவு செய்தோம். இப்போது வந்து சந்திக்கின்றார். நான் என்ன சாப்பிடுகிறேனோ நீங்களும் அதை சாப்பிடுங்கள் என ஒரு முறை நினைவு செய்தோம், அவ்வளவு தான். பிறகு நீங்கள் மட்டும் சாப்பிடுவீர்கள். அப்படி

கூடாது. அவருக்கு கொடுப்பதையே மறந்து விடுவீர்கள். அவரை மறந்து விட்டால் அவருக்கு கிடைக்காது. நிறைய வகைகளை சாப்பிடுகிறீர்கள், கிச்சடி சாப்பிடுகிறீர்கள், மாம்பழம் சாப்பிடுகிறீர்கள், இனிப்பு சாப்பிடுகிறீர்கள்...... இவ்வாறு ஆரம்பத்தில் நினைத்தீர், முடிந்தது. மற்ற பொருள்களை அவர் எப்படி சாப்பிடுவார். பிரிய தர்சன் சாப்பிடவில்லை என்றால் இடையில் மாயை சாப்பிட்டு விடும். அவரை சாப்பிட விடாது. மாயை சாப்பிட்டு விட்டால் அது பலசாலி ஆகி விடுகிறது என்பதை நாம் பார்க்கின்றோம். மேலும் உங்களை தோல்வி அடைய செய்கிறது. பாபா அனைத்து வழிமுறை களையும் தெரிவிக்கின்றார். பாபாவை நினைத்தால் பாபா அதாவது பிரியதர்சன் மிகவும் மகிழ்ச்சி அடைவார். பாபா, உங்களுடன் தான் அமர்வேன், உங்களுடன் தான் சாப்பிடுவேன் என கூறுகிறீர்கள். நாங்கள் உங்களை நினைத்துக் கொண்டே சாப்பிடுகின்றோம், ஞானத்தினால் தாங்கள் வாசனையை மட்டும் எடுப்பீர்கள் என அறிந்திருக்கின்றோம். இதுவும் கடனாக பெறப்பட்ட உடலாகும். நினைக்கும் போது அவர் வருகின்றார். அனைத்திற்கும் ஆதாரம் உங்களின் நினைவாகும். இதற்கு யோகா என்று பெயர். யோகத்தில் தான் கடின உழைப்பிருக் கின்றது. சன்னியாசி போன்றோர் இவ்வாறு கூற மாட்டார்கள். நீங்கள் முயற்சி செய்ய வேண்டும் என்றால் பாபாவின் ஸ்ரீமத்தை குறித்துக் (கவனம்) கொள்ளுங்கள். முழுமையாக முயற்சி செய்யுங்கள். நான் எப்படி கர்மம் செய்கிறேனோ அதே போன்று நீங்களும் செய்யுங்கள் என பிரம்மா பாபா தனது அனுபவத்தை கூறுகின்றார். அதே கர்மத்தை தான் நான் உங்களுக்கு கற்பிக்கின்றேன். பாபா கர்மம் செய்ய வேண்டியதில்லை. சத்யுகத்தில் தவறான கர்மம் நடப்பதில்லை. பாபா மிகவும் எளிய வழிகளை சொல்லி கொடுக்கிறார். உன்னுடன் தான் அமர்வேன், கேட்பேன், உன்னுடன் தான் சாப்பிடுவேன்...... இது உங்களின் மகிமையாகும். பிரிய தர்^ன் ரூபத்திலோ அல்லது தந்தையின் ரூபத்திலோ நினையுங்கள். நன்கு சிந்தனை செய்து ஞானத்தின் கருத்துக்களை எடுத்துக் கொள்கிறார்கள் என்று பாடப்பட்டிருக்கிறது அல்லவா. இந்த பயிற்சியினால் விகமர்ங்கள் கூட அழியும். ஆரோக்கியமாக மாறுவீர்கள். யார் முயற்சி செய்கிறார்களோ அவர்களுக்கு நன்மை நடக்கும். யார் செய்ய வில்லையோ அவர்களுக்கு நஷ்டம் ஏற்படும். முழு உலகத்திற்கு அதாவது சொர்க்கத்திற்கு அதிபதியாவதில்லை. இது கணக்கு வழக்காகும்.

பாபா மிகவும் நன்றாக புரிய வைக்கின்றார். நாம் யாத்திரை சென்று கொண்டிருக்கின்றோம் என்ற பாடலை கூட கேட்டீர்கள். யாத்திரை செல்லும் போது உணவு அருந்த வேண்டியிருக்கிறது. பிரிய தர்ஷினி பிரிய தர்^னுடன், குழந்தைகள் தந்தையுடன் சாப்பிடுவார்கள். இங்கேயும் அப்படி தான். உங்களுடைய பிரிய தர்ஷனுடன் எவ்வளவு ஈடுபாடு (அன்பு) இருக்கிறதோ அவ்வளவு குஷியின் அளவு அதிகரிக்கும். நிச்சய புத்தி உடையவர் வெற்றி அடைந்துக் கொண்டே போவார்கள். யோகா என்றால் ஓட்டம். இது புத்தியின் ஓட்டமாகும். நாம் மாணவர்கள். டீச்சர் நமக்கு ஓட கற்பிக்கின்றார். பகலில் வேலை மட்டும் தான் செய்ய வேண்டும் என நினைக்காதீர்கள் என பாபா கூறுகின்றார். ஆமையை போன்று செயலை செய்து விட்டு நினைவில் அமருங்கள். குளவி முழு நாளும் ரீங்காரம் இட்டுக் கொண்டே இருக்கிறது. பிறகு சில பறந்து விடுகிறது, சில இறந்து போகிறது, இது ஒரு எடுத்துக் காட்டாகும். இங்கே நீங்கள் ரீங்காரம் செய்து தனக்குச் சமமாக மாற்றுகிறீர்கள். அதில் ஒரு சிலருக்கு மிகவும் அன்பிருக்கிறது. சிலர் அழுகி போகிறார்கள். சிலர்

அரைகுறையாக இருந்து விடுகிறார்கள், ஓடிப் போகிறார்கள். பிறகு புழுவாகவே மாறி விடுகிறார்கள். எனவே இவ்வாறு ரீங்காரம் இடுவது மிகவும் எளிதாகும். மனிதனிலிருந்து தேவதையாவதற்கு எந்த போரும் தேவை இல்லை...... இப்போது நாம் யோகா செய்கின்றோம். தேவதையாவதற்கான முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். இந்த ஞானம் கீதையில் இருந்தது. அவர் மனிதனிலிருந்து தேவதையாக்கி விட்டு சென்றார். சத்யுகத்தில் அனைவரும் தேவதைகளாக இருந்தனர். நிச்சயமாக சங்கமயுகத்தில் தான் அவர்களை தேவதையாக மாற்றி இருப்பார். அங்கே தேவதை யாவதற்கான யோகத்தை கற்பிப்பதில்லை. சத்யுக ஆரம்பத்தில் தேவி தேவதா தர்மம் இருந்தது. கலியுக கடைசியில் அசுர தர்மமாக இருக்கிறது. இந்த வி`யங்கள் கீதையில் மட்டும் தான் எழுதப்பட்டிருக்கிறது. மனிதனிலிருந்து தேவதையாவதற்கு நேரம் ஆவதில்லை. ஏனென்றால் குறிக்கோளை தெரிவிக் கின்றார். அங்கே முழு உலகத்திலும் ஒரே தர்மம் தான் இருக்கும். உலகம் முழுவதும் இருக்கும் அல்லவா. சீனர்கள், ஐரோப்பியர்கள் இருக்க மாட்டார்கள் என்பது கிடையாது, இருப்பார்கள். ஆனால் அங்கே மனிதர்களாக இருக்க மாட்டார்கள். தேவதா தர்மத்தினர் மட்டுமே இருப்பார்கள். மற்ற தர்மத்தினர் இருப்பதில்லை. இப்போது கலியுகம் ஆகும். நாம் பகவான் மூலமாக மனிதனிலிருந்து தேவதையாகிக் கொண்டிருக்கிறோம். நீங்கள் 21 பிறவிகளுக்கு சதா சுகமுடையவராக மாறுகிறீர்கள் என பாபா கூறுகின்றார். இதில் துன்பப்படுவதற்கு எதுவும் இல்லை. பக்தி மார்க்கத்தில் பகவானிடம் செல்வதற்காக எவ்வளவு கஷ்ட படுகிறார்கள். அனைத்தையும் கடந்து நிர்வாணத்திற்கு போய் விட்டார்கள் என கூறுகிறார்கள். பகவானிடம் சென்று விட்டனர் என கூறுவது கிடையாது. சொர்க்கத் திற்கு சென்று விட்டனர் என கூறுவார்கள். ஒருவர் செல்வதால் சொர்க்கம் உருவாகாது. அனைவரும் செல்ல வேண்டும். பகவான் காலனுக்கு எல்லாம் காலன் என கீதையில் எழுதப் பட்டிருக்கிறது. கொசு கூட்டத்தைப் போல அனைவரையும் திரும்ப அழைத்துச் செல்வார். இந்த சக்கரம் திரும்ப சுழல்கிறது என புத்தியும் கூறுகிறது. ஆகவே நிச்சயமாக முதன் முதலில் சத்யுகத்தின் தேவி தேவதா தர்மம் திரும்ப வரும். பிறகு மற்ற தர்மங்கள் வரும். மன்மனாபவ என்பதை பாபா எவ்வளவு எளிதாக புரிய வைக்கிறார். அவ்வளவு தான். 5000 வருடத்திற்கு முன்பு கீதையின் பகவான் செல்லமான குழந்தைகளே என கூறினார். ஒருவேளை கிருஷ்ணர் கூறினார் என்றால் மற்ற தர்மத்தினர் கேட்க மாட்டார்கள். பகவான் என கூறினால் இறை தந்தை சொர்க்கத்தை ஸ்தாபனை செய்கின்றார். அதில் நாம் தான் சக்ர வர்த்தி ராஜா ஆகின்றோம் என அனைவருக்கும் தோன்றும். இதில் செலவு எதுவும் கிடையாது. சிருஷ்டியின் முதல் இடை கடையை தெரிந்துக் கொள்ள வேண்டும்.

குழந்தைகளாகிய நீங்கள் விசார சாகர மந்தனம் செய்ய வேண்டும். காரியங்கள் செய்தாலும் இரவும் பகலும் இவ்வாறு முயற்சி செய்துக் கொண்டே இருங்கள். விசார சாகர மந்தனம் செய்யவில்லை என்றாலும். அல்லது பாபாவை நினைக்கா விட்டாலும், காரியங்களை மட்டும் செய்துக் கொண்டே இருந்தால் இரவிலும் கூட அதே எண்ணங்கள் வந்துக் கொண்டே இருக்கும். கட்டிடம் கட்டுபவர் களுக்கு கட்டிடம் பற்றிய எண்ணம் தான் தோன்றும். நல்லது. விசார சாகர மந்தனம் செய்வதற்கான பொறுப்பு இவருக்கு இருக்கிறது. ஆனால் கலசத்தை லஷ்மிக்கு கொடுத்துள்ளார் என்கின்றார்கள். எனவே நீங்கள் லஷ்மி

ஆகிறீர்கள் அல்லவா. நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. ஸ்ரீமத்தை குறித்துக் (கவனத்தில் வைத்துக்) கொண்டு முயற்சி செய்ய வேண்டும். பாபா என்ன கர்மம் செய்து கற்பித்தாரோ அதை செய்ய வேண்டும். விசார சாகர மந்தனம் செய்து ஞானத்தின் கருத்துக்களை தேர்ந்தெடுக்க வேண்டும்.

2. நாம் பாபாவின் நினைவிலிருந்து தான் சாப்பிடுவோம் என்று தனக்கு தானே உறுதி எடுக்க வேண்டும். உன்னுடன் தான் அமர்வேன், உன்னுடன் தான் சாப்பிடுவேன்...... இந்த உறுதி மொழியை உறுதியாக கடைபிடிக்க வேண்டும்.

வரதானம் : கர்மம் மற்றும் சம்பந்தம் இரண்டிலும் சுயநல உணர்விலிருந்து விடுபட்டு இருக்கும் தந்தைக்கு சமானமாக கர்மாதீத் ஆவீர்களாக.

அனைவரையும் (முக்தராக) விடுபட்டவர்களாக ஆக்கி விடுவதற்கான சேவை குழந்தைகளாகிய உங்களுடையது ஆகும். எனவே மற்றவர்களை விடுதலை அடைய செய்து சுயம் தங்களை பந்தனத் தில் சிக்கிக் கொண்டு விடாதீர்கள். எல்லைக்குட்பட்ட எனது எனது என்பனவற்றில் இருந்து விடு பட்டவர் ஆகும் பொழுதே அவ்யக்த ஸ்திதியை அனுபவம் செய்யக் கூடியவர்களாக இருப்பீர்கள். எந்த குழந்தைகள் லௌகீக மற்றும் அலௌகீக கர்மம் மற்றும் சம்பந்தம் இரண்டிலும் சுயநல உணர்விலிருந்து விடுபட்டு இருக்கிறார்களோ அவர்களே தந்தைக்கு சமானமாக கர்மாதீத நிலையை அனுபவம் செய்யக் கூடியவர்களாக இருப்பார்கள். எனவே எதுவரை கர்மங்களின் பந்தனத்தில் இருந்து விலகியவராக ஆகி உள்ளேன் என்று செக் செய்யுங்கள். வீணான சுபாவம் சம்ஸ்காரங் களுக்கு வசப்பட்டவர் ஆவதிலிருந்து விடுபட்டு இருங்கள்.

சுலோகன்: சரளமான உள்ளம் மற்றும் சகஜமான சுபாவம் கொண்டிருப்பவர்களே சகஜயோகி ஆவார்கள். அவர்களே போலாநாத் கள்ளம் கபடமற்ற தந்தைக்கு பிரியமானவர்கள் ஆவார்கள்.